# தென்மராட்சிக் கல்வி வலயம்
## க. பொ. த. உயர்தரம்
## வணிகக்கல்வி

**தரம் 12** **நேரம் : 2 மணித்தியாலயம்**

1. மஜித் என்பவர் தனது ஊரில் கிடைக்கின்ற பழங்களான பப்பாசி, மாம்பழம், எலுமிச்சை, தோடம்பழம் போன்றவற்றைப் பயன்படுத்தி பழச்சாற்றினை தயார் செய்து ஒ. கே (OK) மென்பான கம்பனியினூடாக நாடு முழுவதும் விநியோகம் செய்து வருகிறார். அதற்கு நல்ல வரவேற்பும் மக்கள் மத்தியில் கிடைக்கப்பெறுகிறது.
   அ. Ok நிறுவனத்தால் பயன்படுத்தப்படும் உற்பத்திக் காரணிகள் நான்கினைக் குறிப்பிடுவதுடன் அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணம் தருக. (2 புள்ளி)
   ஆ. O.K. நிறுவனத்தின் மென்பான உற்பத்திகளை தன்மை அடிப்படையில் எவ்வகையானது? உமது விடைக்கான காரணம் தருக. (2 தருக)

2. வணிகங்களின் பண்புகளில் ஒன்று இடர்காணப்படுவதாகும். வணிகங்களில் காணப்படும் இடர்கள் நான்கு தருக. (4 புள்ளி)
3. அ. "இன்று உலகளாவிய ரீதியில் வணிக பரம்பல் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும்" வணிக பரம்பலுக்கான முக்கிய சந்தர்ப்பங்கள் நான்கு தருக. (2 புள்ளி)
   ஆ. வணிகத்தின் அடிப்படை கருமங்கள் பல காணப்படுகின்றது. அவற்றுள் எவையேனும் நான்கினைக் குறிப்பிடுக. (2 புள்ளி)
4. "மயூரி வெதுப்பகம் ஒன்றை சிறந்த முறையில் நடாத்தி வருகின்றார்" மயூரியின் வணிகம் தொடர்பில் அக்கறை செலுத்தும் தரப்பினர் நால்வரைக் குறிப்பிட்டு அக்கறை செலுத்துவதற்கான காரணங்களையும் குறிப்பிடுக. (4 புள்ளி)
5. அ. "புதிய நிறுவனங்கள் சந்தைப்பாங்கினை தன்னிலைப்படுத்துவது எளிமையான காரியமன்று" அந்தவகையில் வணிகங்களில் செல்வாக்குச் செலுத்தும் அண்மிய சூழல் காரணிகள் 4 தருக. (2 புள்ளி)
   ஆ. நிறுவன வளர்ச்சியில் "நிறுவன கலாசாரம்" முக்கியமான பங்காற்றுகின்றது. அந்த வகையில் நிறுவன கலாசாரத்தின் பலம், பலவீனம் தலா இரண்டு தருக. (2 புள்ளி)

02)

1. வணிக சமூகத்திற்கு மீள வழங்கப்படுபவைகளே" சமூக ரீதியான பொறுப்பாகும்.
   அ. வணிகம் சார்பாக சமூகத்தினரால் நிறைவேற்ற வேண்டிய சமூக ரீதியான பொறுப்புகள் நான்கினைக் குறிப்பிடுக. (2 புள்ளி)
   ஆ. வணிகமானது சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் மூலம் பெற்றுக் கொள்ளும் நலன்களைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

2. அ. சூழலின் நிலைபேறான தன்மை தொடர்பாக அண்மைக் காலங்களில் வணிகச் செயற்பாடுகளில் கவனம் செலுத்தப்படும் நான்கு விடயங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

ஆ. வணிக ஒழுக்க விழுமியங்களைக் கட்டியெடுக்கப்படும் போது அமைப்பு கலாசாரம் தொடர்பாக கவனம் செலுத்தப்படும் விடயங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

3. அ. அரசு ஒன்று தனது பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகளைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

ஆ. மத்திய வங்கி நிதிக் கொள்கையினை நடைப்படுத்துவதற்குப் பயன்படுத்தும் கருவிகளைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

4. அ. நுகர்வோரின் உரிமை தொடர்பாக ரு. ஐ. யு. நாட்டின் முன்னாள் ஜனாதிபதியான ஜோன் எப். கெனடியின் நுகர்வோர் உரிமைகள் 4 தருக. (2 புள்ளி)

ஆ. நுகர்வு நடவடிக்கையில் ஈடுபடும் போது நுகர்வோர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நுகர்வோர் பொறுப்புக்கள் 04 தருக. (2 புள்ளி)

5. அ. இலங்கையில் நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக செயற்பட்டு வரும் அரச நிறுவனங்கள் 05 குறிப்பிடுக. (2 புள்ளி)

ஆ.இலங்கைத் தரக் கட்டளைகள் நிறுவனத்தின் தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

03)

1. அருஸ் மற்றும் தருண் ஆகிய இருவரும் நகரின் மத்தியில் கைத்தொலைபேசி விற்பனை மற்றும் பழுது பார்த்தல் நிலையத்தினை ஆரம்பித்து நடாத்தி வந்த இருவரும் தனித்தனி நிலையங்களை உருவாக்கியதுடன் அதனை நடாத்தி வருகின்றனர்.

அ. அருஸ், தருண் ஆகியோர் முதலில் ஆரம்பித்த நிறுவனத்தின் பண்புகள் 4 தருக. (2 புள்ளி)

ஆ. அருஸ், தருண் ஆகியோர் தனித்தனியாக வியாபார நிலையத்தை ஆரம்பித்ததனால் ஏற்படும் பிரதிகூலங்கள் 04 தருக. (2 புள்ளி)

2. தயா தனது கம்பனியை 2007 ஆம் ஆண்டு 7ம் இலக்கக் கம்பனிச் சட்டத்திற்கு அமைவாக கம்பனி பதிவாளரிடம் பதிவு செய்யும் போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

3. கூட்டுறவுச் சங்கம் தொடர்பாக 1995 ஆம் ஆண்டில் மன்கெய்டர் மாநாட்டின் முக்கிய கூட்டுறவுக் கொள்கையினைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

4. அ. "அங்கீகார வணிகங்களில் பெரும்பாலும் பல்தேசியக் கம்பனிகளே பெருமளவு ஆதிக்கம் செலுத்துகின்றது" அங்கீகார வணிகங்களை எவ்வாறு வகைப்படுத்திக் கொள்ள முடியும்? (2 புள்ளி)

ஆ. எரிவாயு தயாரிப்பு நிறுவனம் மோட்டார் வாகன உதிரிப்பாக நிறுவனத்துடன் இணைந்து வியாபார கூட்டு ஒன்றை உருவாக்கியது. இது எவ்வகையான இணைப்பாகும்? (2 புள்ளி)

5. அ. அரசு பொதுமக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்குப் பல்வேறு அமைப்புக்களை உருவாக்கிச் செயற்படுகின்றது. அவ் அமைப்புக்களை எவ்வாறு வகைப்படுத்திக் கொள்ள முடியும் எனக் குறிப்பிடுக. (2 புள்ளி)

ஆ. அரசினால் உருவாக்கப்பட்டுச் செயற்படும் திணைக்களத்தின் பண்புகள் 04 தருக. (2 புள்ளி)

04)

1. மிதுன் தனது உயர்தரக் கல்வியை முடித்துவிட்டு அவனது குடும்பப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டதுடன் அதற்குரிய வருமானத்தை ஈட்டுவதற்காக கழிவு பேப்பரைப் பயன்படுத்தி இயற்கைக்கு நேயமான உரம் ஒன்றைத் தயாரித்து சந்தைப்படுத்தி வருகின்ற ஓர் இளம் முயற்சியாளன் ஆவார்.

2. அ. ஒரு நாட்டின் பொருளாதார விருத்தியில் முயற்சியாண்மை ஏற்படுத்தும் செல்வாக்கினைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

ஆ. அண்மைக் காலத்தில் முயற்சியாண்மையின் போக்குகளைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

3. அ. முயற்சியாளர் ஒருவருக்கு இருக்க வேண்டிய திறன்களைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

ஆ. முயற்சியாண்மைத்திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கு மேற்கொள்ளப்படும் முறைகள் எவை? (2 புள்ளி)

4. அ. சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் வெற்றியடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

ஆ. சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களை ஊக்குவிப்பதற்காகச் செயற்பட்டு வரும் அரச நிறுவனங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

5. அ. இலங்கையில் நிதி நடவடிக்கைகளில் ஏற்படும் ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள் 04 தருக. (2 புள்ளி)

ஆ. அலகுப் பொறுப்பு முகாமை கம்பனியின் கட்டமைப்பில் உள்ளடங்கும் பிரிவினரைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

05)

1. அ. இலங்கையில் உள்ள வணிக வங்கிகள் வழங்கும் பிரதான சேவைகளைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

   ஆ. வணிக வங்கிகளால் வழங்கப்படும் கடன் தொடர்பான சேவைகளைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

2. வணிக வங்கிகளினால் வணிக செயற்பாடுகளில் ஏற்படுத்தும் தாக்கங்கள் / சேவைகள் 04 தருக. (4 புள்ளி)

3. அ. "காசோலை புறக்குறிப்பிடல் மூலமே வங்கியில் பணமாக்க முடியும்" அவ்வாறு ஏன் புறக்குறிப்பிடப்படுதல் வேண்டும் என்பதைக் கூறுக. (2 புள்ளி)

   ஆ. காப்புறுதி ஒப்பந்தமொன்று செல்லுபடியாவதற்கு இருக்க வேண்டிய முக்கிய விடயங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

4. அ. கடலபாயக் காப்புறுதியை எவ்வாறு வகைப்படுத்திக் கொள்ள முடியும் என்பதைக் கூறுக. (2 புள்ளி)

   ஆ. "ஆர்த்தி தனது முகாமையாளர் குறிப்பிட்டதற்கிணங்க செயற்பாடுகளை மேற்கொள்ளாது அச்செயற்றிட்டத்தைச் செய்து முடித்தார்" இருவருக்குமிடையில் செய்தி வேறுபட்டதாக இருப்பதில் தாக்கத்தினை ஏற்படுத்திய காரணங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

5. இலத்திரனியல் தொடர்பாடல் முறையில் அனுகூலம், பிரதிகூலம் இவ்விரண்டு தருக. (4 புள்ளி)

06)

1. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் போது சிவா தனது வியாபார நிலையத்திலுள்ள பொருட்களைத் தனது வாடிக்கையாளர்களுக்குத் தொடர்ந்து வழங்க முடியாது காணப்பட்டார். இதற்குக் காரணம் அவரிடம் களஞ்சியசாலை ஒன்று காணப்படாமையாகும்.

   அ. களஞ்சியசாலையை நிறுவுவதற்கு முன்னர் கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் எவை?

   ஆ. வியாபார நிலையங்களுக்கு போக்குவரத்தினதும் வழங்கல் வேவையினதும் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.

2. விற்பனையகங்கள் அற்ற சில்லறை வியாபார முறைகளைக் குறிப்பிடுக.

3. வெளிநாட்டு வியாபாரத்திற்கு அடிப்படையாக அமைந்த காரணிகள் எவை?

4. ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் முக்கிய ஆவணங்கள் தருக.

5. சர்வதேச வியாபார நடவடிக்கைகளில் சர்வதேச அமைப்புகளின் (வியாபாரம்) முக்கியத்துவம் யாது?